श्रीगुरुभ्योनम:

धर्मो रक्षति रक्षित:

**எவனொருவன் தன் தருமத்தை காப்பாற்றுகின்றானோ,**
**அவனை அந்த தர்மமே காப்பாற்றும்.**

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णु: गुरुर्देवो महेश्वर:।
गुरुर्साक्षात्परब्रह्म तस्मै श्रीगुरवेनम:॥

1. நாம் நமது தர்ம சாஸ்த்திரத்தை அவசியம் தெரிந்து கொண்டு முடிந்தவரை கடைபிடிக்க வேண்டும்.
2. ப்ராம்மணர்களாகிய நாம் ஸூர்ய உதயத்தின்போதும், அஸ்தமனத்தின் போதும் தூங்கக்கூடாது.
3. நாம் நித்யகர்மாக்களில் அடிப்படையான ஸந்தியாவந்தனத்தை எந்த சூழ்நிலையிலும் செய்ய வேண்டும்.
4. ஆண்கள் வெள்ளை வேஷ்டி துண்டுடன்தான் கர்மாக்களை செய்யவேண்டும்.
5. வேதவிதிப்படி வந்த ரிஷிகளின் பரம்பரையில் வரும், ப்ராம்மணர்களாகிய நாம்(ஆண்கள்) கலர், மற்றும் தைத்த துணிகளை போட்டுக்கொண்டு அனுஷ்டானங்களை செய்யக்கூடாது.
6. பெண்கள் வேதமந்திரங்களை சொல்லக்கூடாது.
7. கர்மானுஷ்டானம் செய்யும்போது ஆண்கள் கச்சம் கட்டிக்கொண்டுதான் செய்யவேண்டும்.
8. விவாஹமான பெண்கள் விளக்கேற்றும் போது அவசியம் மடிசார்(கச்சம்) கட்டிக்கொள்ளவேண்டும்.
9. ஒருவர் பயன்படுத்திய ஆடைகள் (வஸ்த்ரம்) சாப்பாட்டுப்பாத்திரம், படுக்கை, செருப்பு, மாலை இவைகளை மற்றொருவர் பயன்படுத்தக்கூடாது.
10. விதிக்கப்பட்ட அபரகர்மாவைத் தவிர ஒருபோதும் ஈர வஸ்த்திரத்துடன் இருக்கக்கூடாது.
11. மற்ற கர்மாக்களை ஈரத்துணியுடன் செய்யக்கூடாது.
12. விதிக்கப்பட்ட அபரகர்மாவைத் தவிர ஒருபோதும் தலைமுடி நுனியை கட்டாமல், விரித்து தொங்க விடக்கூடாது.
13. எந்த ஒரு கர்மாவிற்கும் அவரவர் தனித்தனியாக தீர்த்தபாத்திரம் வைத்துக்கொள்ளவேண்டும்.
14. எந்த ஒரு கர்மாவையும் பூமியில்தான் செய்யவேண்டும். மாடியில் செய்யக்கூடாது.
15. நமது தர்மங்களில் நித்ய கர்மாக்கள், நைமித்திக கர்மாக்கள் என்று இருவகைப்படும்.
16. அதில் நித்யகர்மாக்களான ஸந்தியாவந்தனாதிகளை செய்யவில்லையென்றால் பாபம் வரும்.
17. ஸந்தியாவந்தனம் செய்யாத ப்ராம்மணன்,அமாவாசை தர்ப்பணம் செய்வதாலும், ச்ராத்தம் செய்வதாலும் எந்தவித பலனுமில்லை.
18. பித்ரு ச்ராத்தத்தை ஒவ்வொரு பிள்ளைகளும், குடும்பம் தனித்தனியாக இருந்தால், மற்ற பூஜைகளை வீட்டிலேயே தனியாக செய்வது போல், ச்ராத்தத்தையும் த்னியாகத்தான் செய்யவேண்டும்.
19. எந்த ஒரு கர்மா செய்யும்போதும் நடுவில் பேசக்கூடாது. தவிர்க்க முடியாத நிலையில் பேச் நேர்ந்தால் தேவபாஷையான ஸம்ஸ்கக்ருதத்தில்தான் பேச வேண்டும்.
20. அப்பா, அம்மா ச்ராத்தங்களை விதிக்கப்பட்ட முறைப்படிதான் செய்ய வேண்டும். இதை ஒரு போதும் ஆம ச்ராத்தமாகவோ, ஹிரண்ய ச்ராத்தமாகவோ செய்யக்கூடாது.
21. ஒரு வீட்டில் அப்பா(அ) அம்மா இறந்துவிட்டால் அவர்களுடைய சொந்த பிள்ளைகள்(அ) கர்மாவை செய்யக்கூடிய் கர்த்தாவிற்கு மட்டும்தான் பண்டிகைகள், விரதங்கள் கிடையாது. மற்ற உறவினர்கள் எல்லாவற்றையும் கொண்டாடலாம்.
22. எந்த கர்மாவையும் இந்த நாட்டை (இந்தியா) விட்டு வேறு எந்த நாட்டில் செய்தாலும் பலனில்லை.
23. அந்தந்த காலத்திற்கும், அந்தந்த யுகத்திற்கும் ஏற்றவாறு, வேதத்தை அடிப்படையாகக்கொண்டு ரிஷிகளால் இயற்றப்பட்ட சட்டமான தர்மசாஸ்த்திர முறைப்படிதான் நடந்து கொள்ளவேண்டும்.
24. சட்டம் (தர்ம சாஸ்த்திரம்) தெரியாது என்பதே பாபமாகும். IGNORANCE OF LAW IS NOT AN EXCUSE.
25. வேதத்தை தேவநாகரிலிபி(அ) ஸம்ஸ்க்ருதத்தில்தான் முறைப்படி கற்றுக்கொள்ளவேண்டும். வேறு எந்த மொழியில் படித்தாலும் பாப்ம் வரும். ஒலிநாடா(அ) கணினி மூலமாகவும் கேட்கக்கூடாது.
26. சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு நமது தர்மங்களை (மடி, எச்சில்) இவைகளை கற்றுக்கொடுக்க வேண்டும்.
27. நாம் ஆடம்பர வாழ்க்கையை தவிர்க்க வேண்டும்

र्मो रक्षति रक्षित:

**B. KUMAR,** No. 43.Nehru Street, Madipakkam, Ch-91, Ph: **9444627609**
**D.T.P. In Tamil, English, & Sanskrit. - Lamination, Scanning, CD/DVD Writing**